2nd March 1968]

மருத்துவ மனைகள்

வினு—திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) 1967–68 நிதி ஆண்டில் தமிழகத்தில் சர்க்கார் எடுத்துக் கொள்ளவிருக்கும் மருத்துவ மனைகள் எவை எவை ?

(இ) புதிய மருத்துவ மனைகள் எங்கெங்கு கட்டப்படவிருக்கின்றன ?

(உ) ஆதார நல நிலையம் (Primary Health Centre) 1967–68-ல் எங்கெங்கு ஏற்படுத்த உத்தேசம் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. கூடிய சீக்கிரம் அவை முன் அவைகள் வைக்கப்படும்.

கனம் உறுப்பினர் கேட்ட முதல் கேள்வி 1967–68 நிதி ஆண்டில் தமிழகத்தில் சர்க்கார் எடுத்துக்கொள்ளவிருக்கும் மருத்துவ மனைகள் பற்றியதாகும். அவை 38. இதை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒவ்வொரு ஆதார நல நிலையம் ஏற்படுத்த உத்தேசம் இருக்கிறது. இப்போது ஏற்படுத்தப்படாத இடங்களுக்கும் ஏற்படுத்தப்படும்.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவரவர்களே, ஆஸ்பத்திரி சம்பந்தமாக மாண்புமிகு தலைவரவர்களே வைத்திய இலாகா அமைச்சராக இருந்திருக்கிறார். அப்போதும் இந்த குற்றச்சாட்டை கூறிக்கொண்டிருந்தேன். இப்போதும் கூறுகிறேன். நகரங்களின் மீது தான் அதிகம் கவனம் செலுத்தப்படுகிறது. கிராமங்களில் அதிகமாக ஆஸ்பத்திரிகள் ஆரம்பிக்க முன் வருவார்களா ? ஆஸ்பத்திரிகளே இல்லாத நகரங்களில் ஆஸ்பத்திரிகள் திறக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் சொன்ன கருத்துக்களை ஞாபகத்தில் கொண்டு பல நாட்களாக உள்ள அந்த குறைகளை நிவர்த்திச் செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

District Board Buildings

***158 *Q.*—THIRU N. R. THIAGARAJAN.**—Will the Hon. the Minister for Local Administration be pleased to state :—

(*a*) the present use of the erstwhile District Board buildings ;

(*b*) the disposal given to the records and other properties ;

(*c*) the disposal given to District Board Railway Cess Fund; and

(*d*) the details of the places in which the fund was kept and its financial break-up ?

மாவட்டக் கழக கட்டிடங்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பழைய மாவட்ட கழக கட்டிடங்கள் என்ன உபயோகத்தில் இருக்கின்றன ?

(இ) தஸ்தாவேஜிகள் இதர சொத்துக்கள் என்ன செய்யப்பட்டன ?

(உ) மாவட்ட கழக ரயில்வே செஸ் நிதி என்ன செய்யப்பட்டது ?

(எ) எங்கெங்கு அந்த நிதி எவ்வளவிருந்தது ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைக்குள் இருக்கின்ற மாவட்டக் கழக கட்டிடங்கள் அந்தந்த ஒன்றியங் களின் வசம் அவைகளின் உபயோகத்திற்காக மாற்றப்பட்டு உள்ளன. இதர பொது கட்டிடங்கள் அரசாங்கத்தின் பல்வேறு உபயோகத்தில் உள்ளன. சம்பந்தப்பட்ட இலாக்காக்களுடன் தொடர்பு கொண்டு மாவட்ட அதிகாரிகள் தேவையுள்ள இலாக்காவுக்கு இட வசதி அளிக்கிறார்கள்.

(இ) ஊராட்சி ஒன்றியங்களுக்கு உபயோகமுள்ள மாவட்ட கழக ஆவணங்கள் அந்தந்த பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு ஒப்படைக்கப்பட் டுள்ளன. இதர பொது ஆவணங்கள் மாவட்ட அதிகாரியின் பொறுப்பில் உள்ளது. பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு மாற்றப்படாத இதர மாவட்டக் கழக பொதுச் சொத்துக்கள் அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டு அவை களின் மதிப்பீட்டை மாவட்டக் கழகத்தின் இருப்போடு கணக்கு வைக்கப் டுள்ளது.

(உ) மாவட்டக் கழகத்திற்குச் சொந்தமான ரெயில்வே செஸ் நிதி பெரும்பாலும் அரசாங்க கடன் பத்திரங்களாக இருக்கின்றன. இந்த நிதியின் முதல் பொறுப்பு பஞ்சாயத்து ஒன்றியங்களில் ஆரம்பப் பள்ளிகள் கட்டு வதற்காகவும், அடுத்தபடி தாய்-சேய் நல விடுதிகளும், மருத்துவ மனை களும் கட்டுவதற்காகவும் பயன்படுத்தப்படவேண்டும். இந்த நிதியை மேற் கூறிய காரியங்களுக்குப் பயன்படுத்த மாவட்ட அதிகாரிகளுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(எ)—	ரூபாய் (லட்சத்தில்.)
திருநெல்வேலி பழைய மாவட்டக் கழகம்	6·92
திருச்சிராப்பள்ளி மாவட்டக் கழகம்	1·16
இராமநாதபுரம் மாவட்டக் கழகம்	1·59
சேலம் மாவட்டக் கழகம்	30·50
தஞ்சாவூர் மாவட்டக் கழகம்	123·00
கோயம்புத்தூர் மாவட்டக் கழகம்	27·92
தென் ஆற்காடு மாவட்டக் கழகம்	8·44
மதுரை மாவட்டக் கழகம்	6·72

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, தஞ்சை ஜில்லா, நெல்லை ஜில்லா. ரெயில்வே சம்பந்தமாக மத்திய சர்க்கார் கொடுப்பதாக இருந்தால், கோடிக்கணக்கான ரூபாய்கள், கொடுத்திருக்க வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிற்கும், பஞ்சாயத்துக்களுக்காகக் கொடுத்ததாக தெரிய வில்லை. சர்க்கார் பத்திரங்களாக இருந்தாலும் அதற்கு மதிப்புகொடுத்து அந்தப் பணத்தில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் உத்தரவு போடுமா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : ஒவ்வொரு மாவட்டக் கழகம் மூலமாக கிடைத்த தொகையின் விவரம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ரூபாயை வைத்துக் கொண்டு மாவட்டக் கடன் தொகையை ஈடு செய்ய அரசு உத்தேசித்திருக்கிறது. அந்த மாவட்டக் கழக வளர்ச்சித் திட்டங்களுக்கு மாவட்ட வளர்ச்சி மன்றங்களும் அரசாங்கத்தின் சிபாரிசு படி பயன்படுகின்றன. இதற்கான விதிமுறைகள்படி நடைபெறுததால் சில மாவட்ட மன்றங்களில் இந்த தொகை பயன்படுத்தப்படாமல் இருந்து வருகிறது.

Kodaikanal Township Committee

***159 *Q*.—THIRU N. R. THIAGARAJAN :** Will the Hon. the Minister for Local Administration be pleased to state :—

(*a*) the development works executed after the Kodaikanal Municipality, Madurai district, has been converted into a Township Committee ;